[1981 பிப்ரவரி 5

(முற்பகல் 9—50)

திரு. ரா. கிருஷ்ணன் : சமீப காலத்தில் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. இதற்கு முன்பு பல்வேறு இயக்கங்கள் நடத்தப்பட்டு அதன் பேரில் ஜி.ஓ. போடப்பட்டு போட்ட நாளிலிருந்து குறைந்த பட்சக் கூலி கொடுக்க வேண்டியிருக்க பாக்கி வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றித் தகவல் இல்லை. அரசாணை இட்ட நாளிலிருந்து வழங்கப்படவில்லை என்றால் விளக்கம் கேட்கப்பட்டு முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஆண்—பெண் வித்தியாசம் இல்லாது சமநிலையில் மேற்படி கூலி கொடுக்கப்படுமா ? 240 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்தவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்படுமா ? விவசாயிகளுக்குத் தேவையான தொழிற் கருவிகள் வழங்கப்படுவதில்லை, அதுபற்றி அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : : அரசாணை எதுவோ அதையொட்டி நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : விவசாயத் துறையின் கீழ் உள்ள அரசுப் பண்ணைகளில் வேலை பார்க்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்த ஊதியம் தரப்படாததன் காரணமாகப் பல இடங்களில் போராட்டம் நடைபெற்று வருகிறது. நாம் நிர்ணயித்த கூலியை முன்னுதாரணமாக நாம் கொடுப்பதோடு அவர்களுடைய கோரிக்கைகளை நியாயமாக ஏற்று அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நியாயமான கோரிக்கைகள் எப்போதும் நிச்சயமாக ஏற்கப்படும்.

விவசாயத்துறைத் தலைவர் பதவி

*வினா எண் 191—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயத்துறையில் அத்தொழில் வல்லுனரையே துணைத் தலைவராக நியமிக்க அரசு ஏதும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

1981 பிப்ரவரி 5]

திரு. எஸ். சிவராமன் : விவசாயத் துறையில் அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் நியமிக்கப்படுவார்களா என்று கேட்டதற்கு 'இல்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக டெக்னிகல் லைனில் இருக்கக்கூடியவர்களை மருத்துவம், கால்நடைத் துறை ஆகியவற்றில் இயக்குநர்களாக, துறையின் செயலாளர்களாக ஆக்கினால் அவர்களுக்கு அந்தத் துறையைப் பற்றி நன்றாகத் தெரியும் என்ற முறையில் நன்றாகச் செயல்பட முடியும். ஆகவே, அவ்வாறு நியமிக்கப்பட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேளாண்மைத் துறை இயக்குநர் பொறுப்பு பதவி இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அலுவலரால் பொதுத்துறையில் இருந்து நியமிக்கப்படுகிறது. துறை வல்லுநரை நியமிக்க வேண்டுமென்ற பிரச்சினை இப்போது எழவில்லை.

திரு. எஸ். சிவராமன் : மத்திய அரசு பொறுப்பில் இருந்து நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். மாநில அரசு அதை மாற்றியமைக்க சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

ஜங்கால்பட்டி சாலை.

*வினா எண். 192—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி ஐக்கியநாயக்கனூர், ஜங்கால்பட்டி (வழி) அழகன்பட்டி ரோடு ஆர். ஆர். ஸ்கீமிலிருந்து எப்போது அனுமதிக்கப்பட்டது ?

(ஆ) இதுவரை எவ்வளவு வேலை முடிக்கப்பட்டிருக்கின்றது ?

(இ) வேலை சுணக்கமாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) 1—4—1977-ல்.

(ஆ) 3 கி. மீட்டர்.

(இ) சில பட்டாதாரர்கள் தங்கள் நிலங்களை சாலை அமைக்க கொடுப்பதற்கு மறுப்பதுடன் அவர்கள் தங்களுடைய நிலங்களில் எந்த வேலையும் செய்யக்கூடாது என ஆட்சேபணை தெரிவிப்பதால் சாலை அமைக்கும் பணியின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது.